# 2009, மே 8ஆம் தேதியன்று வழங்கப்பட்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் சுருக்கம்.

1. மேதகு உச்சநீதிமன்றம் இராகவன் கமிட்டியால் ஆக்கப்பட்ட பல பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஆணையிடுகின்றது. இப்பரிந்துரைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன.
   - ஆலோசகர்களை நியமித்தல், இளைய மாணவர்களின் வருகைக்கு ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு பிந்தைய மூத்த மாணவர்களின் வருகை; கூட்டாக உணர்வுறும் நிகழ்ச்சிகள்; முதல்வர் / கல்வி நிறுவனத்தின் தலைவரால் அறிவுறுத்தப்படும் “இளைய மாணவர்கள்” மற்றும் “மூத்த மாண்வர்களின்” கூட்டு நோக்குநிலை நிகழ்ச்சிகள்; கலாச்சார, விளையாட்டு மற்றும் பிற நடவடிக்கைகளின் பெரிய அளவு அமைப்பு; ஆசிரியர்கள் தங்களின் முறையான விடுதிகளில், அவ்விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களோடு உணவருந்தும் ஏற்பாடுகளைச் செய்தல், முதலியன போன்ற நம்பிக்கைக் கட்டமைப்பு நடவடிக்கைகள்.
   - ஒவ்வொரு கல்விநிறுவனமும் கண்டிப்பாக, கேலிவதைத் தடுப்புக் குழுவினையும், கேலிவதைத் தடுப்புப் படையையும் கொண்டிருக்க வேண்டும். பல்கலைக்கழக நிலையில், தனது ஆட்சிப்பரப்பின் கீழ் இணைக்கப்பெற்ற கல்லூரிகள் மற்றும் கல்விநிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் ஓர் கேலிவதைக் கண்காணிப்புப் பிரிவு இருத்தல் வேண்டும்.
   - கல்லூரி வளாகங்களுக்கு வெளியே, பெருகிவரும் வியாபார ரீதியான தனியார் உறைவிடங்கள் அல்லது விடுதிகளைக் கருத்தில் கொண்டு, இதைப்போன்ற விடுதிகளும் நிர்வாகமும் கண்டிப்பாக உள்ளூர் காவல்துறை அதிகாரிகளிடம் பதிவு செய்யப்பட்டு, அதைப்போன்ற விடுதிகளைத் தொடங்குவதற்கு அனுமதி பெறப்பட வேண்டும் அல்லது கல்வி நிறுவனங்களின் தலைமையால் அவைகளைப் பதிவுசெய்வது கண்டிபாக அவசியம் என்று பரிந்துரைக்கப்பட வேண்டும். கேலிவதை வரையரைக்குள் வரும் சம்பவங்களின் மேல் கண்காணிப்பதை உறுதிசெய்வது உள்ளூர் காவல்துறை மற்றும் உள்ளூர் நிர்வாகம் ஆகியோருடன் கல்விநிறுவன அதிகாரிகள் ஆகியோருக்குக் கட்டாயமாக்கப்படுகின்றது.
   - விடுதிக்காப்பாளர்கள் கண்டிப்பாக எல்லா நேரங்களிலும் அணுகப்படக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும், மேலும் அவர்கள் தொலைபேசி அல்லது பிற தகவல்தொடர்பு பயன்முறைகளில் கிடைக்கப்பெறுவது முக்கியமானதாகின்றது. இதைப்போன்று கல்வி நிறுவங்களின் தலைவர்கள், ஆசிரியர்கள், கேலிவதைத் தடுப்புக்குழு உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் துணை மண்டல அதிகாரிகள் மற்றும் பொருத்தமான இடங்களில் மாநில அதிகாரிகள் ஆகியோர்களின் தொலைபேசி எண்களும் அவசர காலங்களில் தொடர்பு கொள்ளும் அல்லது உதவி கோரும் தேவைக்காக பரவலாக பரப்பப்பட வேண்டும்.

- கேலிவதையில் ஈடுபடுவதோ அல்லது அதைத் தூண்டுவதோ இல்லை என்ற ஒப்புதலைப் பெறுவதற்காக ஒவ்வொரு கல்வி அமர்வுகள் தொடங்கப்படும் சமயத்தில் தடுத்தல் மற்றும் குறைதீர்க்கும் முறைகளின் செயல்திட்டத்தை உள்ளடக்கியிருக்கும் சிற்றேடுகள் அல்லது சிறுநூல்/துண்டுப் பிரசுரம் ஆகியவை ஒவ்வொரு மாணவருக்கும் விநியோகிக்கப்பட வேண்டும்.
- கல்வி நிறுவனங்கள் ஒவ்வொரு விடுதியும் விடுதியிலேயே தங்கியிருக்கும் அல்லது மிகக் குறைந்தபட்சத்தில், விடுதிக்கும் மிகவும் அருகில் தங்கியிருக்கும் ஓர் முழுநேர விடுதிக் காப்பாளரைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

2. இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம், யுஜிசி, எம்சிஐ, ஏஐசிடிஇ, மற்றும் இவைபோன்ற பிற ஒழுங்குமுறை அமைப்புகள் ஆகியவற்றின் ஆலோசனையுடன், முனைவர். ராஜ் கச்ரூ-வால் பரிந்துரைக்கப்பட்ட முறையில் மத்திய நெருக்கடிகால தொலைபேசி இணைப்பு மற்றும் கேலிவதைத் தடுப்பு தரவுத்தளத்தை அமைக்கும் நடவடிக்கையில் இருந்த்து என்று மாண்புமிகு உச்சநீதி மன்றம் ஒத்துக் கொள்கின்றது. எனினும், மாண்புமிகு நீதிமன்றம் அதனுடன் பின்வருவனவற்றையும் கூடுதலாக இணைத்துக் கொள்கின்றது.
   - தரவுத்தளத்தைக் கண்காணிக்கும் வேலை, பொதுமக்களிடம் நம்பிக்கையைக் கட்டமைப்பதற்காக இந்திய மத்திய அரசால் உடனடியாகப் பரிந்துரைக்கப்படும் ஓர் அரசுசாரா முகைமையிடம் கொடுக்கப்பட வேண்டும் இணக்கமற்ற தகவல்கள் ஒழுங்குமுறை அமைப்புகளிடமும் ராகவன் கமிட்டியிடமும் வழங்கப்பட வேண்டும்.
   - இத்தரவுத்தளம் ஒவ்வொரு மாணவர் மற்றும் அவன் / அவளின் பெற்றோர்கள் / பாதுகாவலரால் உறுதிப்படுத்தப்பட்ட உறுதிச் சான்றுகளுக்கு வெளியே உருவாக்கப்பட வேண்டும், மேலும் இது ஒவ்வொரு மாணவரின் விவரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.
   - இத்தரவுத்தளம், பெறப்பட்ட கேலிவதைப் புகார்கள் மற்றும் அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் நிலையையின் பதிவேடாகவும் செயல்பட வேண்டும்.

3. யுஜிசி யால் முறைப்படுத்தப்பட்ட கேலிவதையின் அச்சுறுத்தலைத் தடைசெய்தல் மீதான ஒழுங்குமுறைகள் ஏஐசிடிஇ, எம்சிஐ, டிசிஐ, என்சிஐ முதலியன போன்ற அனைத்து பிற ஒழுங்குமுறை அமைப்புகளாலும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் ஆணையிடுகின்றது.

4. அமன் கச்ரூவின் மரணம் உள்ளிட்ட சம்பவங்கள், வழிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் முன்வரைவு போதுமானதாக இல்லை என்பதைத் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் ஒத்துக்

கொள்கின்றது. எனவே, அந்த ஒழுங்குமுறைகள் கண்டிப்பானதாக வலியுறுத்தப்பட வேண்டும் என்றும் கேலிவதையைத் தடுப்பதிலும் கேலிவதையில் ஈடுபடுவோரைத் தண்டிப்பதிலும் உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்காத கல்வி நிறுவனங்கள் / நிர்வாகத்தின் தலைமைகளுக்கு தண்டனைக்குரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் என்று மாண்புமிகு நீதிமன்றம் ஆணையிடுகின்றது. தண்டனைக்குரிய விளைவுகளுக்குக் கூடுதலாக, கேலிவதையின் புகார்களுக்கு பாராமுக அலது உணர்ச்சியற்ற மனப்பாங்கைக் காண்பிக்கும் அந்த கல்விநிறுவன தலைமைகள் / நிர்வாகத்தின் உறுப்பினர்கள் / ஆசிரியர்கள் / கற்பித்தல் அல்லாத ஊழியர்களுக்கு எதிராக துறைசார்ந்த விசாரணைகள் தொடங்கப்படும் என்றும் மாண்புமிகு நீதிமன்றம் ஆணையிடுகின்றது.

5. மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும் கண்டிப்பாக கேலிவதையின் தீமைகள் மற்றும் அதைத் தடுத்தலை நோக்கிய கூருணர்ச்சிபடுத்துவராக இருத்தல் வேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. நிர்வாக ஊழியர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள், பாதுகாவலர்கள் முதலியோர்களை உள்ளடக்கிய கற்பித்தல் அல்லாத ஊழியர்களும் கேலிவதையின் தீமைகள் மற்றும் விளைவுகளை நோக்கி முறையாக மேம்படுத்தப்பட வேண்டும்.

6. கல்வி நிறுவனம் / துறையின் முதல்வர் அல்லது தலைவர், கற்பிக்கும் மற்றும் கற்பித்தல் அல்லாத ஊழியர்கள், சிற்றுண்டி சாலையை நடத்துவோர் அல்லது கட்டிடம் / புல்வெளிகளை கண்காணிகும் மற்றும் சுத்தப்படுத்தும் அல்லது பராமரிக்கும் ஊழியர்கள் போன்றோர்களை உள்ளடக்கிய வளாகத்திற்குள் வேலை செய்யும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆகிய கல்விநிறுவனத்தின் ஒவ்வொரு ஊழியர்களிடமிருந்தும், தன் கவனத்துக்கு வரும் ஏதேனும் கேலிவதை பற்றிய விவரங்களைத் தான் உடனடியாக தகவல் அளிப்பதாகக் கூறும் ஓர் ஏற்பிசைவினைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் ஆணையிடுகின்றது. அவ்வாறு கேலிவதை பற்றிய தகவல் அளிக்கும் ஊழியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதற்கு சேவைவிதிகளில் ஓர் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும், அச்சான்றிதழ் அவரது சேவைப் பதிவேட்டில் நடைத்திறனை அமைக்கும்.

7. புதிய மாணவர்களின் பெற்றோர் / பாதுகாப்பாளர்கள் ஏதேனும் கேலிவதை சம்பவங்களைப் பற்றி கல்விநிறுவனத்தின் தலைமைக்கு உடனடியாகத் தகவல் அளிக்கும் தங்களின் பொறுப்பை உணர்ந்துகொள்வது அவசியம் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

8. தனது அதிகாரம் ஓர் குறிப்பிட்ட கல்லூரியின் மீது விழக்கூடிய எஸ்ஹெச்ஓ/எஸ்பி, சம்பந்தப்பட்ட கல்லூரி வளாகத்தில் எந்த ஒரு கேலிவதையும் நடைபெறவில்லை என்பதையும் அவ்வாறு ஏதேனும் கேலிவதைச் சம்பவங்கள் நடைபெற்றால் அதைத் தாம் திறம்படக் கையாள வேண்டும் என்பதையும் உறுதிசெய்வதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று

மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. தரவுத்தளம் / நெருக்கடி கால தொலைபேசி இணைப்புகள் செயல்படத் தொடங்கிய பின்னர், தனது அதிகாரம் ஓர் குறிப்பிட்ட கல்லூரியின் மீது விழக்கூடிய எஸ்ஹெச்ஓ/எஸ்பி, நெருக்கடிகால தொலைபேசி இணைப்பு ஊழியர்களால் தொடர்புகொள்ளப்படுவார், பின்னர் அந்த எஸ்ஹெச்ஓ/எஸ்பி அதைப்போன்ற சம்பவங்களைத் திறம்படக் கையாண்டு நெருக்கடிகால தொலைபேசி இணைப்பு ஊழியர்கள் மற்றும் / அல்லது சுயாதீன கண்காணிப்பு முகைமையுடன் ஒத்துழைத்துத் தொடர்பு கொள்வார். இது நம்பிக்கையைக் கட்டமைத்து கேலிவ்தைச் சம்பவங்கள் குறித்து பயமும் தாமதமும் இன்றித் தகவல் அளிக்க மக்களை ஊக்கப்படுத்தும்.

9. தரவுத்தளம் / நெருக்கடி கால தொலைபேசி இணைப்புகள் செயல்படத் தொடங்கிய பின்னர், மாநில அரசுகள் தங்களின் கேலிவதைத் தடுப்பு சட்டங்கள் கல்விநிறுவன தலைமைகள் மீது தண்டனைக்குரிய விளைவுகளை ஏற்படுத்தும் வசதிகளை உள்ளடக்கி சீர்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ளது